மத்தாங்ய

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது தனிப் பிரச்னை. மத்திய அரசாங்கம் யாரைக் கலந்து கொண்டு விலை நிர்ணயம் செய்கிறார்கள் என்கிற கவலை நமக்கில்லை. இப்போது இருக்கிற நிலைமை, ரூ. 4 கோடி அளவிற்கு 18,000 பேல்ஸ் வாங்குவார் அற்று ஆலைகளில் இருக்கிறது. நூல் இல்லாது நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நேற்று கூட முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு 'டெலக்ஸ்' மெசேஜ் போய் இருக்கிறது, உடனடியாக அந்த அனுமதியைத் தரவேண்டுமென்று கேட்டு.

திரு. இரா. இராமலிங்கம்: கூட்டுறவுத் துறைக்கு மாநில அரசு விலை நிர்ணயிக்குமா அல்லது அதுவும் மத்திய அரசின் நூல் விலை அடிப்படையில் தான் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கட்டுப்பாடு இல்லாத காலத்தில் நாமே முடிவு செய்கிறோம். நாம் முடிவு செய்யும் விலை நம்முடைய நூற்பு ஆலைகளில் மார்க்கெட் விலையை விடக்குறைவாக இருக்கிறது. கட்டுப்பாடு வந்ததற்குப் பின்னாலே மத்திய அரசு தான் நிர்ணயிக்கவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த நூலை அங்கே வினியோகிக்கும் போது, கூட்டுறவுச் சங்கத்தில் 5 சதவிகிதம் வினியோகச் செலவு வைத்து விற்கிறார்கள் என்றும், தனியார் 1 சதவிகிதம் வினியோகச் செலவு வைத்து விற்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறதே, அந்த வினியோகச் செலவைக் குறைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நெசவாளர்களுக்கு இருக்கும் கோரிக்கையே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு எப்படி குறைந்த விலைக்கு விற்கிறார்களோ, அதேபோல் தங்களுக்கும் விற்கவேண்டுமென்பதாகும். நாம் குறைவாகத்தான் கொடுக்கிறோம். நாம் கேட்டிருக்கும் அதிகாரத்தில் நாமே வாங்கி நம்முடைய சொசைடி மூலமாக வினியோகம் செய்யக் கேட்கிறோம். 'யார்ன் மர்சன்ட்ஸ் அசோசியேஷன்', அதன் தொடர்பாக வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் எங்களுக்கும் அந்த விலைக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது.

Export of Mushrooms

* 589 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Export Market for Mushrooms have been explored by the Tamil Nadu Small Industries Development Corporation Limited; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU S. MADHAVAN : (a) No Sir.

(b) Does not arise.

THIRU N. DENNIS : Sir, in view of the large amount of foreign exchange likely to be earned, may I know whether the Government would take steps for the exploration of these Mushrooms ?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, we are not doing any export business. The Government of India have been doing it. In 1969–70 it was to the tune of Rs. 38 lakhs and odd and in 1971–72 Rs. 30 lakhs and odd.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் காளான் உற்பத்தி மிகச் சிறப்பாக இருக்கிறது. அங்கே அரசுத் துறையில் ஒரு தொழிற்சாலை நிறுவி, அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட செயற்குறிப்பு இருப்பதாக என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தனிப்பட்ட நபர்கள் காளானை மிகப்பெரும் அளவில் பயிர் செய்கிறார்கள் என்பதாகத் தகவல் இருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் காளான் உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதால் அந்த இடத்தில் ஒரு மாதிரிப் பண்ணை வைத்து, காளான் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்கு ஏற்கெனவே பதில் சொன்னேன்.

வக்கீல் குமாஸ்தாக்களிடமிருந்து முறையீடு

* 590 வினு—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வக்கீல் குமாஸ்தாக்களுக்குக் கட்சிக்காரர்கள் கொடுக்கும் பீஸை கோர்ட்டு செலவுத்தொகையில் சேர்க்க வேண்டும் என்று வக்கீல் குமாஸ்தா சங்கங்களிலிருந்து மனுக்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. THIRU S. MADHAVAN : (a) and (b) Such representations have been made from time to time by associations of vakil gumasthas, either to Government or to the High Court. The